நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 219/2024**

**P.W. 1 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சீரங்கம்மாள் |
| தந்தை / கணவர் பெயர் | : | கணேசன் |
| கிராமம் | : | கரட்டுர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 70 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 10–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–2.40PM )

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. ஆஜர் எதிரிகள் எனது உறவுக்காரர்கள் அல்ல. எதிரிகளின் சொந்த ஊர் எடப்பாடிக்கு பக்கத்தில் இருப்பாளி கிராமம் என்றால் சரிதான். நான் வனவாசி கரட்டூர் பகுதியில் குடியிருந்து வருகிறேன். நான் குடியிருக்கும் இடத்திற்கும்

எதிரிகளின் ஊருக்கும் சுமார் 20 கிலோ மீட்டர் இருக்கும் என்றால் சரிதான். சம்பவத்துக்கு இரண்டு வருடத்திற்கு முன்பாக இருந்து எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி கவிதா என்பவரின் கணவர் வீட்டிற்கும் எனது வீட்டுக்கும் இரண்டு வயல் தள்ளிய தூரம் இருக்கும்.

2. சம்பவம் நடந்த இடம் என்னுடைய இடம். அ.சா.2 பத்மா மற்றும் அ.சா.3 இந்திரா ஆக இருவரும் எனது அண்ணன் மகள்கள். எனது வீட்டில் இருந்து இந்திராவின் வீடு இரண்டு கிலோமீட்டர் இருக்கும். பத்மா என்பவரின் வீடு சுமார் 200 மீட்டர் தள்ளி உள்ளது. நான் சத்தம் போட்டு தான் பத்மா வந்தார் என்றால் சரிதான். சம்பவத்தின் போது வேறு யாரும் எனது உடன் இல்லை என்றால் சரிதான். அடித்து விட்டு ஓடும் போதுதான் பத்மா வந்தார். கால் மணி நேரம் இருக்குமா என்றால் இருக்கும்.
3. கவிதா என்னை தடியாள் அடித்தார் அவரது அம்மா கண்ணு பிள்ளை எனது முடியை பிடித்து கீழே தள்ளி தோல் சப்பை மற்றும் அல்லையில் அடித்து விட்டார். கையெல்லாம் முறித்து விட்டார்கள்.கண்ணுப்பிள்ளை அல்லையிலும் தோல் சப்பையிலும் அடித்தார் என்று மருத்துவரிடமும் போலீசாரிடமும் சொன்னேன். நான் சொல்வது போல் தான் எழுதிக் கொண்டார்கள்.
4. கவிதா தடியால் எனது வலது தோல் சப்பையிலும் இடுப்பின் அல்லையிலும் அடித்துவிட்டார். கவிதா மேற்கண்டவாறு அடுத்ததாக தான் மருத்துவரிடமும் போலீசாரிடமும் சொன்னேன். இந்திரா தான் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். எனது அக்கா பெயர் சந்தோஷ் என்னை வண்டியில் வைத்து மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். மேற்படி சந்தோஷ் மற்றும் இந்திராவை தவிர வேறு யாரும் என்னுடன் மருத்துவமனைக்கு வரவில்லை.
5. சம்பவம் நடந்த தேதி எனக்கு தெரியவில்லை என்றால் சரிதான். மாதம் கிழமை எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஒரு மணி நேரம் கழித்து தான் எனது வீட்டுக்கு இந்திராவும் சந்தோசும் மருத்துவமனை அழைத்துச் செல்ல வந்தார்கள் சரிதான். போலீசார் விசாரிக்கும்போது இந்திராவும் சந்தோசம் தான் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் என்று சொன்னேன். நான் மருத்துவமனைக்கு போகும்போது மாலை 4 மணி இருக்கும். மருத்துவமனையில் 5 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். அஞ்சு நாளைக்கு

பிறகு நான் வீட்டுக்கு வந்து விட்டேன்.

6. நான் சம்பவம் நடந்து 13 நாட்கள் கழித்து தான் போலீசில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனைக்கு போகும் முன்பே புகார் கொடுத்து விட்டேன். போலீசில் புகார் கொடுத்து விட்டு தான் மருத்துவமனைக்கு சென்றேன். புகாரை எழுத்து மூலமாக தான் கொடுத்தேன். உதவி ஆய்வாளர் அசோகன் என்பவர் தான் புகாரை எழுதினார். அந்த புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் படிக்கவில்லை. சம்பவம் நடந்த அன்று தான் மேற்படி உதவி ஆய்வாளர் புகாரை எழுதினார்.

7. சம்பவம் நடந்து 7 நாட்கள் கழித்து போலீசார் வந்து என்னை விசாரித்தார்கள். எனது வீட்டுக்கு வந்து விசாரித்தார்கள். அதன்பிறகு என்னை விசாரிக்கவில்லை. என்னை வீட்டில் வந்து விசாரிக்கும் போது சம்பவம் எங்கு நடந்தது என்ன நடந்தது என்று கேட்டு விசாரித்துக் கொண்டு போனார்கள். அந்த சமயத்தில் நானும் எனது கணவர் கணேசனும் இருந்தோம் வேறு யாரும் இல்லை. போலீசார் மேற்படி விசாரிக்கும் போது நானும் வேறு எந்த நபர்களோ கையெழுத்து எதுவும் போடவில்லை.

8. நான் சொன்ன மாதிரி சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியில்லை. நான் சொன்னவாறு எந்த காயங்களும் எனக்கு ஏற்படவில்லை என்றால் சரியில்லை. நான் சொல்லும் சமயத்தில் கவிதா அவரது கணவருடன் கோபித்துக் கொண்டு எனது வீட்டில் இருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அவரது பெற்றோர் வீட்டில் தான் இருந்தார் என்றால் சரியல்ல. இப்பவும் மேற்படி கவிதா தன் கணவருடன் இல்லாமல் அவரது பெற்றோர்கள் இருக்கிறார் என்றால் சரிதான்.

9. எனது வீட்டுக்கும் கவிதாவின் கணவர் வீட்டுக்கும் இடையில் ஒரு ரோடு செல்கிறது கொஞ்சம் நிலமும் உள்ளது. எனக்கும் அவர்களது குடும்பத்திற்கும் எப்பொழுதுமே பேச்சு வார்த்தை இல்லை. ஆனால் கவிதா கணவருக்கும் எங்களுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. கவிதாவின் மாமனார் இறந்துவிட்டார். கவிதாவிற்கும் கவிதாவின் கணவருக்கும் குடும்ப பிரச்சனை உள்ளது என்றாலும் அதனை மனதில் வைத்துக் கொண்டு என்னை வைத்து

பொய் புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரி இல்லை.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–(03.05PM.)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஓம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 219/2024**

**P.W. 3 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | இந்திரா |
| தந்தை / கணவர் பெயர் | : | வெங்கடாஜலம் |
| கிராமம் | : | கரட்டுர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW 3 |
| வயது | : | 48 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 10–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–03.05PM )

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. தற்போது சாட்சி மளித்துச் சென்ற அ.சா.1 ஸ்ரீரங்கம்மாள் எனக்கு அட்டை என்றால் சரிதான். சம்பவம் நடந்தது இரண்டு வருடத்திற்கு முன்னால் இருக்கும் ஆனால் தேதி எனக்கு தெரியவில்லை. என்ன கிழமை என்ன மாதம் என்று

எனக்கு தெரியாது. என் அத்தை அடித்து போட்டார்கள் என்று என் தங்கை பத்மா எனக்கு போன் செய்து தகவல் சொன்னார். நான் எனது அத்தை வீட்டுக்கு வரும்போது மதியம் சுமார் 3 மணி இருக்கும். எனது அத்தையை நானும் சந்தோஷம்தான் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றோம்.

2. சம்பவம் நடந்து உடனே முதலில் ஸ்டேஷனுக்கு தான் எனது அத்தையை அழைத்து சென்று புகார் கொடுத்தோம். நாங்கள் காவல் நிலையம் போகும்போது மாலை 3.30 மணி இருக்கும். புகாரை காவல் நிலையத்தில் இருந்த ஒரு பெண் போலீஸ்காரர் எழுதினார். புகாரில் என்ன எழுதினார்கள் என்று எனக்கு கொஞ்சம் தெரியும் கையில் அடிபட்டது தோளில் அடிபட்டது போன்ற விஷயங்களை எழுதி இருந்தார்கள்.
3. மருத்துவமனையில் ஐந்து நாட்கள் சிகிச்சையில் இருந்தார் அப்போது யாரும் வந்து விசாரிக்கவில்லை சம்பவம் நடந்து ஏழு நாட்கள் கழித்து தான் விசாரணை செய்தார்கள். ஏழு நாள் கழித்து காவல் நிலையத்தில் வைத்து தான் விசாரித்தார்கள். அதன் பிறகு மறுநாள் போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து அவர் வீடு எங்கு உள்ளது எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றெல்லாம் விசாரித்தார்கள். அதன் பிறகு போலீசார் எப்போது விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது.
4. சம்பவ இடத்திற்கு வந்து போலீசார் விசாரிக்கும் போது நான் அங்கு இல்லை. ஸ்ரீரங்கம்மாள் எனக்கு அத்தை என்பதால் அவர் ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–(03.25PM)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**